# குடும்ப வன்முறை என்றால் என்ன?

குடும்ப வன்முறை என்பது ஒரு குடும்பத்திற்குள் நிகழும் ஏதேனும் வன்முறை, அச்சுறுத்தல் அல்லது உணர்ச்சி ரீதியாக/உளவியல் ரீதியாக கட்டாயப்படுத்தும் நடத்தை ஆகும்.

இதில் அடங்குபவை:

- உடல் ரீதியான காயம்
- நேரடி அச்சுறுத்தல்
- பாலியல் தாக்குதல்
- உணர்ச்சி ரீதியாக அல்லது உளவியல் ரீதியாக துயரத்தை ஏற்படுத்தும் செயல்கள்
  (எ.கா. நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரைத் தவிர்க்க வேண்டி கட்டாயப்படுத்துதல் அல்லது ஒரு நபரை அச்சத்திலேயே வாழ வைக்கும் ஏதேனும் நடத்தை)
- சொத்துக்களுக்கு ஏற்படுத்தப்படும் சேதம்
- கட்டாயக் கட்டுப்பாடு



## சட்டப் பாதுகாப்பின் வகைகள்

www.judiciary.gov.sg/services/ifams என்ற இணையப்பக்கத்தின் வாயிலாக குடும்ப நீதிமன்றங்களில் சட்டப் பாதுகாப்பிற்கு நீங்கள் விண்ணப்பிக்கலாம்.

| சுய பாதுகாப்பு ஆணை (பிபிஓ) | துரித ஆணை (ஈஓ) | மனையிட/வீட்டு வளாக விலக்கல் ஆணை (டிஈஓ) |
|---|---|---|
| பிரதிவாதி, குடும்ப வன்முறையில் ஈடுபடுவதிலிருந்து தடுத்திடும் | வன்முறை ரீதியான ஆபத்து உடனடியாக இருந்தால், சுய பாதுகாப்பு ஆணைக்கு முன் தற்காலிக நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்படும் | விண்ணப்பதாரரின் வசிப்பிடத்தின் அனைத்துப் பகுதியிலிருந்து அல்லது குறிப்பிட்ட பகுதியிலிருந்து பிரதிவாதி விலக்கி வைக்கப்படுவார் அல்லது தடுக்கப்படுவார் |

## அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

| | |
|---|---|
| கே 1. சுய பாதுகாப்பு ஆணை எவர்களிடமிருந்து உங்களைப் பாதுகாக்கும்? | இந்த ஆணையானது குடும்ப உறுப்பினர்களிடமிருந்து உங்களைப் பாதுகாக்கும் |
| கே 2. எப்படி விண்ணப்பிக்க வேண்டும்? | ஏதேனும் பாதுகாப்பு நிபுணத்துவ நிலையம் அல்லது குடும்ப நீதி மன்றங்களை அணுகுங்கள் |
| கே 3. சுய பாதுகாப்பு ஆணையைப் பெற எவ்வளவு காலமாகும்? | இந்த ஆணையைப் பெற விண்ணப்பித்ததிலிருந்து 1-3 மாதங்கள் வரை ஆகலாம். துரித ஆணை சீக்கிரம் பிறப்பிக்கப்படக்கூடும். |

SINGAPORE POLICE FORCE
SAFEGUARDING EVERY DAY

க்யூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்து, மௌனத்தைத் தகர்க்கும் (Break the Silence) இணையத்தளத்தில் உங்களை நீங்கள் பாதுகாப்பாக பார்த்துக்கொள்ளும் விதம் குறித்து மேலும் அறிக

# நான் எங்கு உதவியை நாடுவது?

## வன்முறை மற்றும் பாலியல் தாக்குதலுக்கு எதிரான தேசிய தொலைபேசிச் சேவை (NAVH)




வன்முறை அல்லது தவறான பயன்பாடு குறித்த சம்பவத்தைப் புகாரளிக்க:

1800-777-0000 என்ற எண்ணில் NAVH ஐ அழையுங்கள்; அல்லது பின்வரும் NAVH புகாரளிக்கும் படிவம் வாயிலாக இணையவழி புகார் செய்யுங்கள்: https://go.gov.sg/navh

உங்களுக்கோ/பாதிக்கப்பட்டவரின் வாழ்வு மற்றும் பாதுகாப்பிற்கு உடனடி தீங்கு எதுவும் இருந்தால், உடனடி உதவிக்கு 999 என்ற எண்ணில் காவல் துறையை அழையுங்கள் அல்லது 71999 என்ற எண்ணுக்கு குறுஞ்செய்தி (எஸ்எம்எஸ்) அனுப்புங்கள்.

NAVH புகாரளிக்கும் படிவத்திற்கு மேலேயுள்ள க்யூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யுங்கள்

## குடும்பச் சேவை நிலையங்கள் (FSCக்கள்)



குடும்பச் சேவை நிலையங்கள் என்பன சமூக அடிப்படையிலான சமூக சேவைகளாகும், இவை பொதுமக்களுக்கு பல்வேறு சமூக ஆதரவு சேவைகளை வழங்குகின்றன. இவற்றால் நிதி, பிள்ளை வளர்ப்பு, திருமணம், குடும்பம் அல்லது தனிப்பட்ட பிரச்சினைகளுக்கு உதவ முடியும்.

வயது, இனம், மொழி அல்லது மதம் பாராமல், குடும்பச் சேவை நிலையத்தில் எவரும் உதவி பெறலாம். தீவு முழுவதும் 48 சமூக சேவை நிலையங்கள் உள்ளன, இவை சமூக சேவை அமைப்புகளால் நடத்தப்படுகின்றன.

உங்களுக்கு அருகிலுள்ள சமூகச் சேவை நிலையத்தை பின்வரும் பக்கத்தில் அறிந்து கொள்ளுங்கள் -

https://www.msf.gov.sg/our-services/directories

உங்களுக்கு அருகிலுள்ள சமூகச் சேவை நிலையத்தை அறிந்திட மேலேயுள்ள க்யூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்யுங்கள்

## பாதுகாப்பு நிபுணத்துவ நிலையங்கள் (PSCகள்)



பாதுகாப்பு நிபுணத்துவ நிலையங்கள், இல்லத்தின் வன்முறை மற்றும் பாலியல் வன்முறை உள்ளிட்ட அனைத்து விதமான வன்முறைகளையும் அனுபவிக்கும் நபர்களுக்கு சமூக மற்றும் உணர்ச்சிபூர்வமான ஆதரவை வழங்குகின்றன. டிரான்ஸ் சேஃப் (TRANS SAFE) நிலையம் மற்றும் கேர் கார்னர் புராஜக்ட் ஸ்டார்ட் (care Corner Project StART) ஆகியவை சிங்கப்பூரில் உள்ள இரண்டு பாதுகாப்பு நிபுணத்துவ நிலையங்கள் ஆகும்.

வன்முறையை அனுபவிக்கும் தனிநபர்கள் மற்றும் குடும்பங்களுக்காக தனிநபருக்கான பேவ் ஒருங்கிணைந்த சேவைகள் மற்றும் குடும்பப் பாதுகாப்பு நிபுணத்துவ நிலையத்தையும் (ISIFPSC) நீங்கள் அணுகலாம், இவை ஒருங்கிணைந்த சமூக அடிப்படையிலான பல பயன்பாட்டு சேவையாகும்.

SINGAPORE POLICE FORCE
SAFEGUARDING EVERY DAY

https://go.gov.sg/msf-bts

க்யூஆர் குறியீட்டை ஸ்கேன் செய்து, மௌனத்தைத் தகர்க்கும் (Break the Silence) இணையத்தளத்தில் உங்களை நீங்கள் பாதுகாப்பாக பார்த்துக்கொள்ளும் விதம் குறித்து மேலும் அறிக

# நான் எங்கு உதவியை நாடுவது?

## சமூக நீதி நிலையம்

சமூக நீதி நிலையத்தின் (CJC) வழக்கறிஞர்கள், விவாகரத்து செய்யும் தம்பதியினரிடையே குழந்தைப் பராமரிப்பு மற்றும் திருமண சொத்துக்களைப் பிரித்தல் போன்ற விஷயங்களுக்கு பேச்சுவார்த்தை நடத்தி, போட்டியின்றி விவாகரத்து கோரி மனு தாக்கல் செய்ய உதவுவார்கள்.

# நிதி உதவி தேடுகிறீர்களா?

சமூகச் சேவை அலுவலகம் (SSO), சமூக நலன் (கொம்கேர்) நிதி உதவியை நிர்வகிக்கும், மேலும் உதவிக்கான உங்கள் தகுதியையும் மதிப்பிடும்.

**சமூக நலன் (கொம்கேர்) தொலைபேசிச் சேவை: 1800 222 0000**

## சமூக நலன் (கொம்கேர்) இடைக்கால உதவி

அவசர மற்றும் தற்காலிக நிதி நிவாரணம் தேவைப்படும் குறைந்த வருமானமுடைய தனிநபர்கள் அல்லது குடும்பங்களுக்கு உடனடி நிதி உதவி வழங்குகிறது.

சமூகச் சேவை அலுவலகங்கள், சமூக நிலையங்கள் அல்லது குடும்பச் சேவை நிலையங்களில் விண்ணப்பியுங்கள்

## சமூக நலன் (கொம்கேர்) குறுகிய காலம் முதல் நடுத்தர கால அளவு வரையான உதவி (SMTA)

குறைந்த வருமானமுள்ள தனிநபர்கள் அல்லது தற்காலிகமாக வேலை செய்ய முடியாத, வேலை தேடும் அல்லது குறைந்த வருமானம் ஈட்டுவதால் உதவி தேவைப்படுபவர்களுக்கு அல்லது குடும்பங்களுக்கு தற்காலிக நிதி உதவி வழங்குகிறது.

- SupportGoWhere (https://supportgowhere.gov.sg/grants/smta) வழியாக இணையவழியில் விண்ணப்பியுங்கள்
- மாற்றாக, நேரில் விண்ணப்பிக்க உங்களுக்கு அருகிலுள்ள சமூகச் சேவை அலுவலகத்திற்குச் செல்லுங்கள்.

# பிற விதமான ஆதரவைத் தேடுகிறீர்களா?

## நடத்தைக் கோளாறுகளையுடைய பிள்ளை அல்லது இளையர்களுக்கு ஆதரவளித்தல்

### குடும்ப வழிகாட்டுதல் ஆணை சோதனை

பெற்றோர்கள், 16 வயதுக்குட்பட்ட மற்றும் கடுமையான நடத்தை சவால்களைக் கொண்ட தங்கள் பிள்ளை/இளையருக்காக 'குடும்ப வழிகாட்டுதல் ஆணை (FGO)' பிறப்பிப்பதற்கு இளைஞர் நீதிமன்றத்தின் உதவியைப் பெற விண்ணப்பிக்கலாம்.

குடும்ப வழிகாட்டுதல் ஆணைக்காக விண்ணப்பிப்பதற்கு முன், பெற்றோர்கள் முதலில் கீழே உள்ள நியமிக்கப்பட்ட முகமைகளில் ஏதேனும் ஒன்றில் குடும்ப வழிகாட்டுதல் ஆணைக்கு முந்தைய பரிசோதனை செய்வதற்கு ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்ய வேண்டும்:

- சிங்கப்பூர்ச் சிறுவர் சங்கம்
  6273 2010
  www.childrensociety.org.sg
- EPWORTH சமூக சேவைகள்
  6562 2211
  www.epworth.sg

## மூத்தோர் மற்றும் முதுமைக்கால மறதி நோயுள்ளவர்களுக்கு உதவி நாடுதல்

### ஒருங்கிணைந்த பராமரிப்பு அமைப்பு (AIC)

ஒருங்கிணைந்த பராமரிப்பு அமைப்பு, முதுமைக்கால மறதி நோய் அல்லது மனநலப் பிரச்சினைகள் உள்ளவர்களின் பராமரிப்பாளர்களுக்கு பொருத்தமான நிதி உதவி மற்றும் வளங்களை பெறச்செய்திட உதவுகிறது.

- ஒருங்கிணைந்த பராமரிப்பு அமைப்பின் தொலைபேசிச் சேவை
  1800-650-6060 www.aic.sg

## தொடர்புத்திறன் குறைபாடு உள்ளவர்களுக்கு உதவி நாடுதல்

### தொடர்புத்திறன் குறைபாட்டுக்கான வளமை நிலையம் (ARC)

தொடர்புத்திறன் குறைபாட்டுக்கான வளமை நிலையம் (ARC), குடும்பப் பராமரிப்பாளர்கள்/தொழில் வல்லுநர்களுக்கு கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் அதிகாரம் அளித்தல் ஆகியவை தொடர்பாக சேவைகளை வழங்குவதன் மூலம், தொடர்புத்திறன் குறைபாடுள்ள நபர்கள் தங்கள் வாழ்க்கையில் தங்களின் திறனை அதிகரிக்க உதவுகிறது.

- தொடர்புத்திறன் குறைபாட்டுக்கான வளமை நிலையம்
  6323 3258 www.autism.org.sg